RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1116

OPEN ACCESS

# பாரதியாரின் சொற்பொழிவுகள் உணர்த்தும் சூழலும் கருத்தியல்களும்

**ம. அகதா** அ, *

அ தமிழ்த்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி, பெரம்பலூர்-621220, தமிழ்நாடு, இந்தியா

# Context and Ideologies that are Conveyed by Bharathiyar's Discourses

**M. Agatha** [a, *]

[a] Department of Tamil, Thanthai Hans Roever College, Perambalur-621220, Tamil Nadu, India

* Corresponding Author: agathasenthilkumar@gmail.com

Received: 17-08-2021
Revised: 20-07-2022
Accepted: 27-07-2022
Published: 09-09-2022

Check for updates

**ABSTRACT**

Bharathi is an era. He is a multi-evolutionary creator. Even though his creativity was expressed in various forms of literature, his poems are the most talked about and admired by people. However, no one knows much about his speeches. During the period from 1905 to 1921, Bharathiyar gave many lectures. There are only eight discourses among them. Those eight discourses reflect the state of crisis Bharathi was in and the tribulations of our Indian nation. At the same time, Bharathi's courage and eloquence are also captured in these speeches. Although they appear to be direct advice to the youth, they are infused with social, national, and patriotism. Anyone can speak clearly without fear in a normal environment. But the context and background in which Bharathi is speaking is unimaginable. In that situation, Bharathi's fearless delivery of a social concept amidst many bans makes it worth thinking about and admirable. In every discourse, Bharathi points out some general qualities that the youth of the day should possess. They are compassion for living beings, national welfare and patriotism, the aim of liberation, striving for liberation, a sense of unity, and taking historical scholars as pioneers. This study is based on illustrating the context and ideologies of the eight discourses.

**Keywords:** Bharathiyar, Liberation, Discourses, Unity, Ideology

## முன்னுரை

தமிழ் இலக்கிய மரபில் செய்யுளுக்கான மரபை, நவீனக் கவிதையாக, எதார்த்த வரிகளாக, நடைமுறையை வெளிப்படுத்துவனவாக மாற்றிய பெருமை மகாக்கவிக்கே உண்டு. அவர் தொடங்கிய கவிதை விதை இன்று ஒரு விருட்சமாகப் பரிணமித்து இருக்கிறது. பாரதி ஒரு கவிஞராக மட்டுமில்லாது தனது பல்வேறு பரிணாமங்களால் தமிழ் உலகிற்குத் தொண்டு செய்திருக்கிறார். அவரது கட்டுரைகள், தலையங்கங்கள், சித்திர விளக்கங்கள், கடிதங்கள், மதிப்புரைகள், சரித்திரங்கள், சிறுகதைகள், கதைகள், மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றின் வரிசையில் பாரதியின் சொற்பொழிவுகளும் அடங்கும். இச்சொற்பொழிவுகள் நடத்தப்பட்ட சூழலும், அவற்றின் கருத்தியல்களும் ஒரு விடுதலைப் போராட்ட வரலாற்றை, அக்காலச் சூழலின் முக்கிய காலகட்டத்தை நமக்கு எடுத்துரைக்கின்றன. அதே சமயத்தில் பாரதிக்கு இருந்த நெருக்கடி நிலை, அந்த நெருக்கடி நிலையிலும் அவரது துணிச்சலான பேச்சு, மொழிநடை ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. அதனடிப்படையில் பாரதி நிகழ்த்திய எட்டு சொற்பொழிவுகள் இந்த ஆய்விற்கு முதன்மை ஆதாரங்களாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

## பாரதியாரின் சொற்பொழிவுகள்

பாரதியின் சொற்பொழிவுகள் பல்வேறு ஆண்டுகளில் வெவ்வேறு தலைப்புகளில் அமைந்துள்ளன. மொத்தம் எட்டுசொற்பொழிவுகளே கிடைத்துள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை அக்காலத்தில் அவரை வேவு பார்த்த போலீசாரால் ஆங்கில மொழியில் குறிப்பு எடுக்கப்பட்டவை. அவை 1. கருணை, 2. ஒன்றுகூடி செயல்படுவோம், 3. நம்முடைய நோக்கம், 4. தீவிர பிரச்சார முயற்சி, 5. நித்திய வழிபாடு, 6. நானே கடவுள், 7. இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை, 8. ஒத்துழையாமை ஆகியவையாகும்.

## கருணை

'கருணை' என்ற தலைப்பில் பாரதி சென்னை பிரசிடென்சி கல்லூரி மாணவர்களுக்காக சொற்பொழிவு ஆற்றியிருக்கிறார். பாரதி முதலில் ஆற்றிய சொற்பொழிவு இதுவே என அறியப்படுகிறது. இவ்வுரையில் கருணையை மானுஷீக கருணை, தெய்வீகக் கருணை என்று இரண்டாகப் பிரித்து விளக்குகிறார். மானுஷீகக் கருணையில் உயர்தர அன்பு, சிட்னி மன்னனைப் பற்றிக் கூறுதல், கருணையில்லாத அரசர்களின் வரலாறு ஆகியவற்றை எடுத்துரைக்கிறார். கருணையில்லாத மன்னர்கள் என்று டைமர், நீரோ, பாண்டியராஜன் ஆகிய மன்னர்களைப் பற்றி கூறுகிறார். மானுஷீக கருணையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது தெய்வீகக் கருணை என்கிறார். தன்னலம், இயற்கைப்பற்று, நன்றியறிவு, காதல், என்பவற்றிலிருந்து முற்றிலும் தெய்வீகக் கருணை வேறுபடுகிறது என்பதைக் கூறுகிறார். தெய்வீகக் கருணையில் புத்தர், இயேசு கிறிஸ்து பற்றி விரிவாகக் கூறியதோடு, சொற்பொழிவின் முடிவில் புத்தர் கண்டறிந்ததே தெய்வீகக் கருணை என்று கூறுகின்றார். அன்றைய இளைய சமூகமான மாணவர்களுக்கு கருணை என்பதன் உண்மையான பொருள் என்ன என்பதைக் கூறவே பாரதி இச்சொற்பொழிவை ஆற்றியிருக்கிறார். அவர் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி பின்வருமாறு அமைகிறது.

'நண்பர்களே, இத்தெய்வீக கருணையின் பெருமையை என்னால் அளவிட்டுரைக்க முடியாது. அதைப்பற்றி விவாதம் செய்யாதே, பேசாதே, நகையாதே, செய்துபார். அதன் இயற்கை தெரியும்' என்கிறார் (Vishwanathan, 1998).

## ஒன்று கூடி செயல்படுவோம்

'ஒன்றுகூடிச் செயல்படுவோம்' என்ற தலைப்பில் பாரதி மக்களுக்காக சென்னை திருவல்லிக்கேணி தெற்குக் கடற்கரையில் உரையாற்றுகிறார். வங்க தேசத்தின் முடி சூடா மன்னர் 'விபின் சந்திர பாலர்' விடுதலை செய்யப்பட்டதைக் கொண்டாடுவதற்காக இச்சொற்பொழிவை நிகழ்த்துகிறார். எந்த ஒரு கூட்டத்திலும் பாடல் பாடுவதற்கு அக்காலத்தில் தடை இருந்தது. அந்தச் சூழலிலும் பாரதி 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்ற பாடலை இந்தச் சொற்பொழிவின் முதலிலும், இறுதியிலும் பாடுகிறார். மக்கள் அனைவரையும் ஒன்றுகூடி சுதேசிய-சுயராஜ்யக் கொள்கைகளுக்கு ஆதரவாக செயல்படவோ, போராடவோ முன்வரவேண்டும் என்று அழைக்கிறார். பாரதி ஆற்றிய சொற்பொழிவில் ஒரு பகுதி பின்வருமாறு அமைகிறது.

'ஒரு மகாராஜாவையோ பெருத்த விருது பெற்றவரையோ மதிக்கும் பொருட்டு இங்கு நீங்கள் வரவில்லை.விபின் சந்திரபாலர் விடுதலைப் பெற்றதைக் கொண்டாடவே கூடியிருக்கிறீர்கள்'என்கிறார் (Vishwanathan, 2002).

## நம்முடைய நோக்கம்

'நம்முடைய நோக்கம்' என்ற இத்தலைப்பில் பாரதி,சென்னை ஜனசங்கத்தின் ஆதரவில் திருவல்லிக்கேணியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். சென்னையில் தேசியவாதிகளின் நடவடிக்கைகளை நகர ரகசியப் போலீசார் வேவு பார்த்து வந்தனர். அவர்களுடைய பேச்சுக்களைச்

சுருக்கெழுத்தாளர்களைக் கொண்டு, பல்வேறு வேடமிட்டு குறிப்பும் எடுத்தனர். இச்செயலைக் கண்டு பாரதி மனம் நொந்து பேசிய சொற்பொழிவே இது. இச்சொற்பொழிவு முழுமையாகக் கிடைக்கப்படவில்லை. அதில் ஒரு பகுதி பின்வருமாறு அமைகிறது.

‘இங்கு கூடியிருக்கும் பத்திரிக்கையாளர்களையும், வேவு பார்ப்போர்களையும் பேச்சுக்களை முழுமையாகப் பதிவு செய்ய கேட்டுக்கொள்கிறேன். அப்படியே அவை பதிப்பிக்கப்படவும் வேண்டும்’ என்கிறார் (Vishwanathan, 2002). இவ்வடிகளிலிருந்தே அவரது மன உறுதியும், துணிச்சலும் வெளிப்படுவதை உணரமுடிகிறது.

## தீவிரப் பிரச்சார முயற்சி

பாரதி இந்த தலைப்பில் திருவல்லிக்கேணி சீமாட்டி பூங்காவிற்கு எதிரே அமைந்திருந்த தெற்கு கடற்கரையில் பேசினார். கடற்கரையில் நடைபெறும் கூட்டங்களைத் தடுத்து விடுவதால் சுதேசி இயக்கத்தின் முன்னேற்றம் எந்த விதத்திலும் தடைபடாது. அதிகாரிகள் மேற்கொள்ளும் செய்கையானது அவர்களின் பலவீனத்தையே வெளிபடுத்துகிறது என்று இக்கூட்டத்தில் போலீஸ் அதிகாரிகளை நேரடியாகச் சாடுகிறார். இதில் ஒரு பகுதி பின்வருமாறு அமைகிறது.

‘இப்படி அதிக நபர்களை ஒரே இடத்தில் திரளச் செய்வது, அவர்களைக் கலைந்துபோகச் செய்வது-மக்கள் மறுத்தால் சென்னையையும் ஒரு திருநெல்வேலி யாக்குவது என்று அவர்கள் திட்டமிடுகிறார்கள. கூட்ட அழைப்புத் துண்டுப்பிரசுரங்களை எந்தச் சபையும் வெளியிட்டதாகத் தெரியவில்லை’ என்கிறார் (Vishwanathan, 2002).

## நித்திய வழிபாடு

சென்னையில் பாரதி ஐந்து தலைப்புகளில் சொற்பொழிவு ஆற்றத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அவை 1.The cult of the eternal, 2.Immortality, 3.The faith of the vedas,4.The Doctrine of the Upanishads, 5.The Place of Women in Human Society ஆகியவையாகும். அவற்றுள் கிடைத்திருக்கும் ஒரே ஆங்கிலச் சொற்பொழிவு இதுதான். 1919 ஆம் ஆண்டு மார்ச் மூன்றாம் நாள் வி.பி ஹாலில் நீதிபதி ஸர்.எஸ் சுப்ரமணிய அய்யர் தலைமையில் நடைபெற்றது. இதற்கு நுழைவுக் கட்டணமும் வசூலிக்கப்பட்டது. இச்சொற்பொழிவில் வேற்றுமையில் ஒற்றுமையை பல்வேறு நிலைகளில் விவரிக்கிறார். முனிவர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், பக்தர்கள் என்று பல்வேறு பிரிவுகளைக் கொண்டிருந்தாலும் அவர்களுக்குள் தேசம் என்னும் ஒற்றுமையைக் காண முடிகிறது என்கிறார்.

## நானே கடவுள்

பாரதியார் இத்தலைப்பில் அமைந்த சொற்பொழிவினை கோகலே ஹாலில் 17.03.1919 அன்று பேசியதாக 18.03.1919 ஆம் தேதி வெளியிடப்பட்ட சுதேசமித்திரன் இதழ் குறிப்பிடுகிறது. இச்சொற்பொழிவில் பாரதி ‘கடவுள் இருக்கிறாரா?’ என்ற கேள்விக்குப் பதிலாக ‘நானே கடவுள்’ என்கிறார். ஒவ்வொரு மனிதனும் இதை உணரவும் வலியுறுத்துகிறார். ’அகம் பிரம்மாஸ்மி (நானே கடவுள்) மற்றும், ‘தத்துவமசி’ (நீயே கடவுள்) என்ற கோட்பாடுகளை வேதங்கள் மற்றும் உபநிடதங்கள் வாயிலாக நிரூபித்து நவீன சாஸ்திர ஆராய்ச்சியும் இதையே கூறுகிறது என்கிறார். இச்சொற்பொழிவின் ஒரு பகுதி பின்வருமாறு அமைகிறது.

‘சர்வ ஜீவ பக்தி மதம் என்ற ஒரு புதிய மதத்தை உலகத்திலுள்ள சகல ஜனங்களும் தழுவ வேண்டுமென்றும், அதனால்தான் உலகம் ஷேமமடைய வேண்டுமென்றும், இப்புதிய மதத்தைக் குறித்துத் தாம் இன்னும் பல பிரசங்கங்கள் இந்நகரில் செய்யப்போவதாகவும், சகல மதஸ்தர்களும் அங்கீகரிக்ககூடிய விஷயங்களையே தாம் அப்பிரசங்கங்களில் சித்தாந்தம் செய்யப் போவதாகவும் சொன்னார்’ என்று சர்வ ஜீவ பக்தி மதம் பற்றி பேசுகிறார் (Vishwanathan, 2009).

## இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை

பாரதி பல்வேறு மொழிகளில் திறம்பட்டவர் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. அதேபோல அரபி மொழியையும் அவர் கற்றிருந்தார். அரபி மொழியில் இருந்த பாத்திஹா (ஜபம்) ஓதி முடித்திருந்தார். அவரது மதச் சார்பின்மைக்கு இந்த ஒரு சொற்பொழிவே உதாரணமாக அமைகிறது. 18.03.1920 இல் ரவண சமுத்திரத்தில் பேசிய பாரதி மீண்டும் இதே சொற்பொழிவை 20.06.1920 அன்று பொட்டல்புதூரில் பேசுகிறார். இச்சொற்பொழிவில் இஸ்லாம் மதத்தைத் தான் விரும்பும் காரணத்தையும், நபிகளைப் பற்றி தான் படித்த ஆங்கில நூல் பற்றியும், நபிகள் கூறிய முக்கிய கருத்துகளையும், நபிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் எடுத்துரைப்பதோடு அல்லாவைப் பற்றி அவர் எழுதிய மூன்று கண்ணிகளில் அமைந்த பாடலையும் பாடுகிறார். முகம்மது நபியைப்பற்றி பின்வருமாறு பாரதியார் கூறுவது மிகுந்த சிறப்புடையது.

'முஹம்மது நபி மஹா ஸுந்தர புருஷர், மஹா சூரர், மஹா ஞானி, மஹா பண்டிதர், மஹா பக்தர், மஹா லௌஹிக தந்திரி. வியாபாரமானாலும் யுத்தமானாலும் முஹம்மது நபி கவனித்தால், அந்த விஷயத்தில் வெற்றி மிகவும் உறுதி. ஆதலால் அவர் மிகவும் அபிமானிக்கப்பட்டார்' என்று பாரதி கூறுவதிலிருந்து நபிகள் மீது அவர் வைத்திருந்த பற்று புலனாகிறது (Vishwanathan, 2010a).

## ஒத்துழையாமை

பாரதி இச்சொற்பொழிவை 30.01.1921 திருவல்லிக்கேணி கடற்கரையில், சென்னையில் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்த மாணவர்களுக்கிடையே பேசுகிறார். ஆங்கிலேயர்கள் தாமும் முப்பது கோடி மக்களோடு சேர்ந்தவர்கள் என்று நம்புகிறார்கள். அவர்கள் மிகக் குறைவானவர்கள். அவர்களுக்கு முப்பது கோடி மக்களாகிய நாம் யார் என்பதைக் காட்ட வேண்டும் என்று வீரவுரை ஆற்றுகிறார். அதுமட்டுமின்றி இங்கிலாந்து, ஐரோப்பா ஆகிய நாடுகளில் நடைபெறும் யுத்தங்களில் மாணவர்கள் பங்குகொண்டு தங்களுடைய உயிரைத் தியாகம் செய்திருக்கின்றனர் என்பதைக் கூறி ஒத்துழையாமை இயக்கத்திற்கு வலு சேர்க்கிறார். அந்த உரையில் ஐரோப்பிய கிளர்ச்சியாளர் ஸ்ரீக்ளேமான்சோவே பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'இந்த சமயத்தில் இந்தியாவில் பரவிவரும் சாத்விக தர்மக் காற்றை சுவாசியாமல் இருப்பாரேயானால் ஸ்ரீக்ளேமான்சோவேவின் வாக்கில் இந்த வார்த்தை உதித்தே இராது என்பதை நான் நிச்சயமாகக் கூறுவேன். இப்போது ஸ்ரீக்ளேமான்சோபாரீஸ் நகரத்திலிருந்தால் அங்கு மறுபடி வீசிவரும் ஜெர்மானிய விரோதக் காற்று இவரையும் தாக்கி, இவருடைய புத்தி சாத்வீக நெறிகளிலே செல்ல இடம் கொடுத்திராது. என்று இவ்வுரை அமைகிறது (Vishwanathan, 2010b).

## ஆய்வின் பயன்

பாரதியின் கவிதைகளை மட்டுமே தமிழ்ச்சமூகம் அதிகம் பேசுகிறது. அவரது கவிதைகள் போன்றே அவரது கட்டுரைகள், தலையங்கங்கள், சித்திர விளக்கங்கள், கடிதங்கள், மதிப்புரைகள், சரித்திரங்கள், சிறுகதைகள், கதைகள், மொழிபெயர்ப்புகள் ஆகியவையும் அந்த வரிசையில் பாரதியின் சொற்பொழிவுகளும் அடங்கும். இப்போது இருப்பதுபோல ஊடக வசதிகள் அப்போது இருந்திருந்தால் இச்சொற்பொழிவுகள் யாவும் நமக்கு காணொளியாகக் கிடைத்திருக்கும். அவரது சொற்பொழிவுகள் ஒவ்வொன்றும் ஒரு சூழலை, மனப்போராட்டத்தை, தேசிய நலனை, மக்களது நலனை, அவருக்கு முன்னர் இருந்த மாபெரும் மனிதர்கள் பற்றிய வரலாற்றைப் பிரதிபலிக்கிறது. இந்த ஆய்வுரையை இக்கால இளைஞர்கள் அறிந்தும், புரிந்தும் உள்வாங்குவதால் ஒரு பற்றுடைய தேசம் உருவாகும். அக்காலத்தில் இளைஞர்களிடையே எழுச்சியும், ஒற்றுமையும் இருந்ததுபோல இன்றைய இளைஞர்களிடையேயும் அவ்வுணர்வு மேலும் வலுப்பெறும். இவையே இந்த ஆய்வின் பயன்களாகும்.

## முடிவுரை

பாரதியின் ஒவ்வொரு சொற்பொழிவும் அந்த காலச்சூழலைப் பிரதிபலிப்பதோடு, ஒரு வரலாற்றுப் பெட்டகமாகவும் அமைகிறது. பாரதியின் கவிதைகளை வாசிப்பதோடு அவரது சொற்பொழிவுகளை இன்றைய இளைய சமூகம் அறிந்துகொள்வது அவசியமாகிறது. அவரது சொற்பொழிவு ஒவ்வொன்றும் நெருக்கடி நிலையிலேயே பேசப்பட்டு இருக்கிறது. போலீசார் பாரதியின் ஒவ்வொரு அசைவுகளையும் உன்னிப்பாகக் கவனித்து வந்ததோடு, அவர் மேடைகளில் அவரது கவிதைகளைப் பாடல்களாக பாடவும் தடைசெய்திருந்தார்கள். இவ்வாறாக இந்த ஆய்வு பாரதி ஆற்றிய சொற்பொழிவுகளின் கருத்தியல்களையும், அவை நிகழ்த்தப்பட்ட சூழலையும் ஆராய்கிறது. இதேபோல இனிவரும் ஆய்வு மாணவர்கள் பாரதியின் கதைகள், சிறுகதைகள், இதழியல் கட்டுரைகள் ஆகியவற்றை ஆராய்ந்து தருதல் என்பது தமிழ்ச் சமூகத்திற்கு பெருத்த கொடையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## References

Vishwanathan, S., (1998) Kaala Varisai Padutha Patta Bharathi Padaippugal, Volume-1, Bharathi Puthakalayam, Chennai, India.

Vishwanathan, S., (2002) Kaala Varisai Padutha Patta Bharathi Padaippugal, Volume-3, Bharathi Puthakalayam, Chennai, India.

Vishwanathan, S., (2009) Kaala Varisai Padutha Patta Bharathi Padaippugal, Volume-10, Bharathi Puthakalayam, Chennai, India.

Vishwanathan, S., (2010a) Kaala Varisai Padutha Patta Bharathi Padaippugal, Volume-11, Bharathi Puthakalayam, Chennai, India.

Vishwanathan, S., (2010b) Kaala Varisai Padutha Patta Bharathi Padaippugal, Volume-12, Bharathi Puthakalayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License